DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : MC.No.4/2024 | Deposition of Witness for : PW1 |
| Name : நிவேதா செல்வராணி | Father/Husband Name : ஜெபராஜ் பிரசாத் |
| Age : 26 | Village : மெஞ்ஞானபுரம் |
| Taluk : திருச்செந்தூர் | Calling : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 01 December 2025.
Respondent absent. Petition filed and allowed.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

1. இந்த வழக்கு தாக்கல் செய்யும் முன்பே நான் விவாகரத்து பெற்று விட்டேன் என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் Exparte Order ல் விவாகரத்து பெற்றேன் என்ற விபரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு திருமணம் Covid 19 காலக்கட்டத்தில் நடைபெற்றது என்றால் சரிதான். 3 ஆவது எதிர்மனுதாரரின் சகோதரி திருமணத்திற்கு வந்தபோது Covid 19 தொற்று ஏற்பட்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். 3 ஆவது எதிர்மனுதாரரின் சகோதரி இறந்துவிட்டதால் திருமணம் நடந்த பின்பு நான் 10 நாட்கள் என்னுடைய அம்மா வீட்டில் இருந்தேன் என்றால் சரிதான். நான் என்னுடைய அம்மா வீட்டில் இருந்து வந்த காலகட்டத்தில், 1 ஆவது எதிர்மனுதாரருக்கும் எனக்கும் எந்தவிதமான பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான்.

2. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள 10 ஆவது போட்டோ Cake ஆனது எதிர்மனுதாரர் வீட்டில் வைத்து வெட்டப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள 3,6,13 ஆகிய புகைப்படங்கள் எதிர்மனுதாரர்கள் வீட்டில் பிறந்த நாள் கொண்டாடிய போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆகிய சில மாதத்தில் விருந்திற்காக கோயம்புத்தூருக்கு சென்றேன் என்றால் சரிதான். நான் கோயம்புத்தூருக்கு சென்றபின், நான் கோயம்புத்தூரில் சிகிச்சை எடுப்பது 1 ஆவது எதிர்மனுதாரருக்கு தெரியக்கூடாது என்பதற்காக நான் அவரை திருப்பி அனுப்பிவிட்டேன் என்றால் சரியல்ல. சென்னையில் தனியாக வீடு எடுத்து தங்கிவந்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 20 ஆவது மற்றும் 21 ஆவது புகைப்படங்கள் நான் சென்னையில் இருந்தபோது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் என்றால் சரிதான். சென்னையில் தங்கியிருந்த வீடு மாடி வீடு என்றால் சரிதான். அந்த மாடி வீட்டில் மேலே ஏறும்போது மூச்சு வாங்குகிறது என்பதால் கூடுவாஞ்சேரியில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன் என்றால் சரியல்ல, எனக்கு காய்ச்சல் என்பதால் தான் மருத்துவமனைக்கு சென்றேன். நான் இதை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. நான் திருச்செந்தூரில் உள்ள PG மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தபோது 1 ஆவது எதிர்மனுதாரர் என்னுடைய கையில் ரொக்கமாக ரூ.5,000/- தந்தார் என்றால் சரிதான். PG மருத்துவமனையில் பாலா கிட்னி கேர் சென்டர், திருநெல்வேலி சென்று சிகிச்சை பெறுமாறு அறிவுறுத்தியதன்பேரில் நான் திருநெல்வேலி பாலா கிட்னி கேர் சென்டருக்கு சென்று சிகிச்சை பெற்றேன் என்றால் சரியல்ல. நான் தற்போது எந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறேன் என்றால் திருநெல்வேலி பெல்



DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2025.12.01 17:39:53 +0530

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறேன்.

4. 29.09.2022 அன்று 1ஆவது எதிர்மனுதாரரின் சகோதரர், 1ஆவது எதிர்மனுதாரரின் சகோதரரின் மாமானர் என்னுடைய வீட்டிற்கு சமாதான பேச்சுவார்த்தைக்கு வந்தார்கள் என்றால் சரிதான். 1ஆவது எதிர்மனுதாரரின் சகோதரின் மாமனார் சிகிச்சைக்கு ரூ.12,000/– தந்தார் என்றால் சரியல்ல, நான் இதை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பேச்சுவார்த்தைக்கு வந்தபோது நானும் 1ஆவது எதிர்மனுதாரரும் மெஞ்ஞானபுரத்தில் உள்ள ஆலயத்திற்கு சென்று வந்தோம் என்றால் சரிதான். 1ஆவது எதிர்மனுதாரர் ஊரில் அசனம் நடைபெற்றபோது அவருடைய வீட்டில் இருந்து அசன சாப்பாட்டை என்னுடைய வீட்டிற்கு வந்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். நான் மேற்கூறிய விபரங்களை என்னுடைய மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆகிய போது ரூ.20,000/– மற்றும் ரூ.5,000/– மதிப்புள்ள இரண்டு செல்போன்களை 1ஆவது எதிர்மனுதாரர் வாங்கிக் கொடுத்தார் என்றால் சரிதான்.

5. 2ஆது எதிர்மனுதாரர் இருதய நேயாளி என்றால் சரியல்ல, நான் இருக்கும்போது சுகர், பிரசர் ஆகியவை இருந்தது, தற்போது இருக்கலாம். 3ஆவது எதிர்மனுதாரர் ஆலயத்தில் உள்ள ஆலயப் பணியாளர் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 1ஆவது புகைப்படத்தில் உள்ள 2 நபர்களும் 3ஆவது எதிர்மனுதாரரின் தாயார் மற்றும் 2ஆவது எதிர்மனுதாரரின் தாயார், இரண்டு நபர்களையும் 3ஆவது எதிர்மனுதாரர் தான் பராமரித்து வருகிறார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 4,5 ஆகிய புகைப்படங்கள் மெஞ்ஞானபுரம் ஆலய அசன விழாவில் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். மெஞ்ஞானபுரம் ஆலய பிரதிஷ்டை 28.01.2022 அன்று நடைபெற்றது என்றால் சரிதான்.

6. எனக்கு வலிப்பு நோய் உண்டா என்றால் திருமணத்திற்கு பின்பு உண்டு. வலிப்பு நோய் உள்ள விபரங்களை நான் 1,2,3 எதிர்மனுதாரர்களுக்கு தெரியப்படுத்தவில்லை என்றால் சரிதான். வலிப்பு நோய்க்காக நான் எவ்வளவு காலமாக சிகிச்சை பெற்று வருகிறேன் என்றால் அக்டோபர் 2023 எனக்கு வலிப்பு நோய் வந்தது. வலிப்பு நோய்க்காக திருச்செந்தூர் எடிசன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். வலிப்பு நோய் சிகிச்சைக்காக நான் முதல் முறையாக மருத்துவமனைக்கு செல்லும்போது யார் யார் என்னுடன் வந்தார்கள் என்றால் என்னுடைய அம்மா மட்டும் வந்தார். முதல் முதலாக எனக்கு எங்கு வைத்து வலிப்பு நோய் வந்தது என்றால் என்னுடைய வீட்டில் வைத்து வந்தது. எனக்கு வலிப்பு நோய் திருமணத்திற்கு முன்பு இருந்தது என்றாலும் நான் திருமணத்தின்போது 1ஆவது எதிர்மனுதாரருக்கு தெரியாமல் மறைத்துவிட்டேன் என்றாலும் சரியல்ல, திருமணம் முடிந்த பிறகு எதிர்மனுதாரர்கள் சண்டை போட்டதால் எனக்கு வந்தது, அதற்கு முன்பு எனக்கு வலிப்பு நோய் இல்லை.

7. என்னுடைய இரு சிறுநீரகங்களும் செயலிழந்ததை நான் எதிர்மனுதாரர்களிடம் நான் சேர்ந்து வாழ்ந்த காலகட்டத்தில் தெரியப்படுத்தவில்லை என்றால் சரியல்ல. எந்த மாதம், எந்த வருடம் சிறுநீரகம் செயல் இழந்த விபரத்தை நான் தெரியப்படுத்தினேன் என்றால் 2023 வருடம் ஜீன் மாதம் நான் எதிர்மனுதார்ரகளிடம் தெரியபடுத்தினேன். இந்த விபரங்கள் நான் தாக்கல் செய்த மனுவிலோ, விவாகரத்து மனுவிலோ நான் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த விபரங்களை நான் வேண்டுமென்றே நீதிமன்றத்திற்கு மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல.

8. திருமணமான 2 மாதத்தில் என்னுடைய வயிறு வீங்கி பிரச்சனை ஏற்பட்டதால் என்னுடைய தாயார் என்னை பார்க்க வந்தார் என்றால் என்னுடைய தாயார் மற்றும் 3ஆம் எதிர்மனுதாரர் என்னைப் பார்க்க வந்தார்கள், அவர்கள் என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள், மருத்துவர் என்னை பரிசோதித்துவிட்டு எந்த பிரச்சனையும் இல்லை என்று கூறிவிட்டார்கள், குழந்தை இல்லை என


DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2025.12.01 17:39:59 +0530

சண்டைபோட்டு கொண்டதால் என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். குழந்தை இல்லை என்பதால் எந்த மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தேன் என்றால் திருச்செந்தூரில் உள்ள மருத்துமனையில் சிகிச்சை எடுத்தேன். என்னுடைய மனுவில் எந்த இடத்திலும் குழந்தை இல்லாதற்கு சிகிச்சை எடுக்கச் சென்றோம் என்ற விபரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 2,3 எதிர்மனுதாரர்கள் எனக்கு 2 சிறுநீரங்களும் பழுதடைந்துள்ள விபரங்கள் தெரிந்து என்னை 1 ஆவது எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ என்னை அழைத்தார்கள் என்றால் சரியல்ல, அவர்கள் இந்த விஷயம் தெரிந்ததும் என்னை வேண்டாம் என்று சொல்லி பிரச்சனை செய்தார்கள். என்னுடைய கணவர் ஊரில் தங்கி இருக்கும்போது எந்த சேமிப்பு கணக்கும் தொடங்கவில்லை என்றால் சரியல்ல. நான் என்ன கணக்கு தொடங்கியுள்ளேன் என்றால் தபால் அலுவலகத்தில் ஒரு Account தொடங்கி அதில் மாதம் ரூ.500/- Deposit செய்தேன், 9 மாதங்கள் எதிர்மனுதாரின் வீட்டில் இருந்தேன், 6 மாதங்கள் கழித்து Account தொடங்கப்பட்டது. எத்தனை மாதங்கள் நான் ரூ.500/- கட்டினேன் என்றால் 1 மாதம் மட்டும் ரூ.500/- செலுத்தினேன்.

9. என்னிடம் காட்டப்படும் Original RD Book, Saving Account இரண்டும் 1 ஆவது எதிர்மனுதாரரால் மனுதாருக்கு ஏற்படுத்திக்கொடுத்த தபால் கணக்கு என்றால் நான் வேலைக்கு சென்று தபால் கணக்கில் பணம் செலுத்தினேன். 3 ஆவது எதிர்மனுதாரரால் தொடங்கப்பட்ட கணக்கு என்பதால்தான் தற்போது வரை எனக்கு அதன் விபரங்கள் தெரியவில்லைஎன்றால் சரியல்ல. நான் எங்கு, என்ன வேலை செய்தேன் என்றால் பேக்கிங் கம்பெனியில் வேலை செய்தேன், மாதம் ரூ.5,000/- சம்பளம் பெற்றேன். சுமார் எவ்வளவு மாதங்கள் நான் வேலைக்கு சென்றேன் என்றால் 1 மாதம் வேலைக்கு சென்றேன். நான் ஒரு மாதம் மட்டும் ரூ.500/- செலுத்தினேன், அதன்பிறகு அந்த கணக்கில் யார் பணம் செலுத்தினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் வேலைக்கு சென்ற விபரம் மற்றும் மாதம் ரூ.5,000/- சம்பளம் வாங்கிய விபரத்தையும் RD Book, Savings Account தொடங்கிய விபரங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

10. எனக்கு சிறுநீரக செயலிழப்பு உள்ள காரணத்தால், மருத்துவர் திருமண உறவில் ஈடுபட கூடாது என்று அறிவுறுத்தியதன் பேரில்தான் நான் என்னுடைய பெற்றோர் வீட்டிற்கு வந்தேன் என்றால் சரியல்ல, எதிர்மனுதாரர்கள் எனக்கு குழந்தை இல்லை என பிரச்சனை செய்து கொண்டிருந்தார்கள், அவர்கள் தான் என்னை என்னுடைய பெற்றோர் வீட்டிற்கு அழைத்துக் கொண்டுவந்துவிட்டார்கள், பின்பு தான் வேண்டாம் என்று கூறினார்கள். எனக்கு சிறுநீரக செயலிழப்பு உள்ள காரணத்தால், மருத்துவர் திருமண உறவில் ஈடுபட கூடாது என்று அறிவுறுத்தினார் என்றால் சரிதான். திருமண உறவில் நான் ஈடுபடக்கூடாது என்பதால் தான் நான் விவாகரத்து பெற்றேன் என்றால் சரியல்ல, எதிர்மனுதாரர்கள் தான் விவாகரத்து தருமாறு கூறினார்கள். 1 ஆவது எதிர்மனுதாரர் தான் விவாகரத்து மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். என்னை திருமண உறவில் ஈடுபடக்கூடாது என மருத்துவர்கள் அறிவுறுத்தியதால் நான் மாண்புமிகு தூத்துக்குடி மாவட்ட நீதிமன்றத்தில் விவாகரத்து மனு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல, எதிர்மனுதாரர்கள் நான் கொஞ்ச நாட்கள் தான் உயிரோடு இருப்பேன், பிறகு இறந்துவிடுவேன் என்று கூறி விவாகரத்து மனு தாக்கல் செய்தார்கள். நான் பிறிந்து வந்த பிறகு என்னுடைய ஊரைச் சேர்ந்த திரு.பில்லி மற்றும் திரு.கமல்சன் என்ற இரண்டு போதகர்கள் முன்னிலையில் என்னுடைய தகப்பனார் எனக்கு திருமணத்தின்போது போடப்பட்ட நகையினை திரும்ப பெற்றுக்கொண்டு சென்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல, அவர்கள் நீதிமன்றத்தில் வழக்கின் மூலம் திரும்ப பெற்று செல்லுமாறு கூறினார்கள். திரு.பில்லி மற்றும் திரு.கமல்சன் என்ற 2 போதகர்களையும் நீதிமன்றம் மூலம் சம்மன் அனுப்பி விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.


DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2025.12.01 17:40:03 +0530

11. எதிர்மனுதாரர்கள் என் மீது உள்ள பாசத்தின் காரமாகத்தான் RD Book, Savings Account ஆகிய இரண்டு கணக்குகளை தொடங்கினார்கள் என்றால் சரியல்ல. நான் பொய்யான காரணங்களை சொல்லி எதிர்மனுதாரர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு 2 சிறுநீரகங்கள் செயலிழந்த விபரம், Fits இருந்த விபரத்தை மறைத்து தான் எதிர்மனுதாரரை திருமணம் செய்தேன் என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில் 2 சிறுநீரகங்கள் செயலிழந்த விபரம், Fits இருந்த விபரத்தை மறைக்கவில்லை, திருமணத்திற்கே முன்பே இந்த வழக்கிலோ, விவாகரத்து வழக்கிலோ எதிர்மனுதாருக்கு தெரியபடுத்திய விபரத்தை தெரியபடுத்தவில்லை என்றால் Fits உள்ள விபரத்தை தான் தெரியபடுத்தியுள்ளேன்.

12. என்னுடைய திருமணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என்னுடைய திருமணம் செல்லாததாக இருக்கும்போது நான் போட்ட இரண்டு மனுக்களும் தள்ளுபடி செய்யத்ததக்கது என்றால் சரியல்ல. நான் தூய்மையான கரத்துடன் இந்த நீதிமன்றத்தை அனுகவில்லை என்றால் சரியல்ல. உண்மையான விபரங்களை மறைத்து தாக்கல் செய்துள்ள இந்த மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. **(புகைப்படங்கள் (25 எண்ணிக்கைகள்) எ.சா.ஆ.1 ஆகவும், RD புத்தகம் அசல் எ.சா.ஆ.2 ஆகவும், Savings Book அசல் எ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

**<u>மறுவிசாரணை</u>** : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V — Digitally signed by DEVI RAKSHA M V Date: 2025.12.01 17:40:08 +0530

Judicial Magistrate, Sathankulam.